


10 ஆண்டுகளில் நீங்கள் வாங்கிய விருதுகள் 79; இரண்டரை ஆண்டுகளில் நாங்கள் 549 விருதுகள் பெற்றிருக்கிறோம்!

# கழக ஆட்சியில் மருத்துவத் துறை மிக வேகமாகச் செயல்படுகிறது!

## சட்டப் பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

சென்னை, பிப். 24-

சட்டப் பேரவையில் உறுப்பினர் பி.தங்கமணி மருத்துவத் துறை குறித்து பேசியபோது, குறுக்கிட்டு பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், “10 ஆண்டு கால உங்கள் ஆட்சியில் 79 விருதுகள் தான் வாங்கினீர்கள். இரண்டரை ஆண்டுகளில் நாங்கள் 549 விருதுகள் பெற்றிருக்கிறோம். கழக ஆட்சியில் மருத்துவத் துறை மிக வேகமாகச் செயல்படுகிறது” என்று தெரிவித்தார்.



இதுகுறித்து சட்டப் பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது: சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நான் மாராத்தானில் போகிற அளவிற்கு துறையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாரத்தானுக்கோ, பயிற்சிக்கோ அதிகாலை 4-30 மணி முதல் காலை 7-00 மணிக்குள்ளாகத்தான் செல்வேன். அந்த அதிகாலை 4-30 மணி முதல் காலை 7-00 மணிக்குள்ளாக உறுப்பினர் எழுந்திருப்பாரா என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அது எல்லோரும் தூங்கும் நேரம். அந்த நேரத்தில் நான் நடப்பதால் அவருக்கு என்ன சங்கடம் ஏற்படுகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. நீங்கள் 10 ஆண்டு காலம் அந்தத் துறையை நிர்வகித்திருக்கிற நீங்கள்,-தமிழ்நாடு முழுவதும் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன; 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன; வட்டார மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. அவற்றில் எத்தனைக்கு சென்றேன்; எத்தனை மலை கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன்; எத்தனை ஊர்களுக்குச் சென்றிருக்கிறேன்; எத்தனை தொகுதி களை *cover* செய்திருக்கிறேன்; இந்த இரண்டரை வருடங்களில் நான் மேற்கொண்ட சுற்றுப் பயணங் கள்; இந்த இரண்டரை வருடங்களில் கட்டி முடித்து திறந்து வைத்திருக்கின்ற கட்டடங்கள் என எல்லாவற்றையும் பட்டியலிட்டு நான் இப்போதுகூட சொல்கிறேன். 10 வருடங்களில் நீங்கள் செய்ததை பட்டியலிட்டுக் காட்டுங்கள். இதில் 10-ல் 1 பங்கு இருந்தால், நீங்கள் என்ன சொன்னாலும் நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்று.

மற்றொன்று, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், *National Quality Assurance Standard Certificate* என்கிற தேசிய தர உறுதித் திட்ட நிர்ணய விருதைப் பொறுத்தவரையில், 10 வருடங்களில் நீங்கள் வாங்கியது வெறும் 79; ஆனால், கடந்த இரண்டரை வருடங்களில் 549 விருதுகளைப் பெற்றிருக்கிறோம்.

அதேபோன்று *LaQshya-Labour Room Quality Improvement Initiative Certificate*-ஐ பொறுத்தவரையில், 7 வருடங்களில் நீங்கள் வாங்கியது வெறும் 29; கடந்த இரண்டரை வருட தி.மு.க ஆட்சியில் பெற்றது 55. இதுபோன்று இந்தத் துறை மிக வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொன்று நீங்களெல்லாம் நடக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும், வேண்டுகோளும் ஆகும். தற்போது, 38 மாவட்டங்களில் நோய் பெருக்கத்திற்கு மூல காரணம் சோம்பேறித்தனமாக இருப்பதாகும். நாங்கள் ஜப்பான் நாட்டுக்கு சென்ற போது பார்த்தபோது, ஒவ்வொருவரும் 8 கி.மீ. தூரம் தினந்தோறும் 10,000 அடி நடக்க வேண்டும். அது தான், எதிர்காலத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வாதாரமும், சுகாதாரமும் ஆகும் என்று ஒரு விஷயத்தை சொன்னார்கள். அந்த வகையில், தற்போது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், 38 மாவட்டங்களில் *Health Walk Scheme* என்பதை ஆரம்பித்து, 8 கி.மீ. தூரத்திற்கு போட்டு, நடப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்; நடப்பதற்கான வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்று பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த அரசை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினருக்குமான வேண்டுகோள்; நீங்களும் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்திருங்கள்; நடக்க ஆரம்பியுங்கள்.

சென்னை மாநகர மக்கள் வெள்ளம் வந்தபோது மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்று சொன்னதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இன்னொன்றைக்கூட சொல்ல வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் சொல்லவில்லை. 20 சென்டி மீட்டர் அளவுக்கு மழை வந்தாலும் சென்னை மழை நீரில் தத்தளிக்காது, வெள்ள பாதிப்பு இருக்காது என்று சொன்னது உண்மை. நாளைக்கே 20 சென்டி மீட்டர் அளவுக்கு மழை வந்தாலும் மழைநீர் பாதிப்பு இருக்காது என்பதை இப்போதுகூட சொல்கிறோம். ஆனால், 47 வருடங்களுக்குப் பிறகு 3 நாட்களில் மட்டும் 53 சென்டி மீட்டர் மழையும், டிசம்பர் 5, 6 ஆகிய இரண்டு நாட்களில் 147 வருடங்களுக்கு முன்பு வந்ததைப்போன்று மிக கன மழையும் பெய்த நிலையில், அந்த பாதிப்பு 2, 3 நாட்களிலே சரி செய்யப்பட்டிருக்கிறது. 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தை சட்டமன்ற உறுப்பினர் கொஞ்சம் நினைத்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, ஆவடி மாநகராட்சியில் 46 ஆவது வார்டு காமராஜ் நகரில் உள்ள ஆர்.சி.எம். மேல்நிலைப்பள்ளியல் மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ., மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல தலைவர் ஜி.ராஜேந்திரன், என்.இ.கே.மூர்த்தி, பா.நரேஷ் குமார், பெ.வினோத், மீனாட்சி குமார், யுவராஜ், ஹரி, வெங்கடேசன், குமார், விஜயன், பாலா, சதீஷ், சக்திவேல், காண்டியப்பன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்ளனர்.

